04.09.2025

O.S.No.34/2014

வா.சா.1.திரு.அழகர்சாமி, த.பெ.பழனியான்.

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

**குறுக்கு விசாரணை**

1. இந்த வழக்கு சொத்திற்கும், எனக்கும் எந்த வகையிலும் சம்பந்தம் கிடையாது என்றால் சம்பந்தம் உள்ளது. இந்த வழக்கின் நான் எத்தனையாவது வாதி என்றால் வாதி கிடையாது. நான் சாட்சி ஆவேன். நான் வாதி அழைத்ததன்பேரில் சாட்சி சொல்ல வந்துள்ளேன் என்றால் ஆமாம். தாவா சொத்தும் எனது வீடும் அருகருகே உள்ளது என்றால் மூன்று மைல் துாரத்தில் உள்ளது. வாதி என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் அவரது சொத்து என்று வழக்கு தாக்கல் செய்துள்ளார். நான் விவசாயம் மட்டும் தான் செய்கிறேன் என்றால் சரிதான். வேறு வேலை பார்க்கவில்லை என்றால் சரிதான். நான் எனது 17 வயது முதல் விவசாயம் செய்து வருகிறேன். தாவா சொத்தில் என்னென்ன விவசாயம் செய்தேன் என்றால் கடலை, மொச்சை, கொள்ளு, துவரை ஆகியவற்றை விவசாயம் செய்தேன். தாவா சொத்து மானாவாரி நிலம் ஆகும். தாவா சொத்தில் நெல் விவசாயம் பண்ண முடியாது என்றால் சரிதான். தாவா சொத்தில் கடலை, மொச்சை, கொள்ளு, துவரை ஆகியவற்றை விவசாயம் செய்தேன் என்று சொல்லும்பட்சத்தில் எந்தெந்த வருடம் என்னென்ன பயிர் செய்தேன் என்றால் சுமார் 20 வருடங்களுக்கு முன்பாக பயிர் செய்தேன். தாவா சொத்து மொத்தம் எவ்வளவு இடம் இருக்கும் என்றால் 30 செண்ட், 40 செண்டிற்குள் தான் இருக்கும். தாவா சொத்தின் நான்குமால் தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்து

கடைசியாக எப்போது பார்த்தேன் என்றால் கடந்த ஒரு மாதத்திற்கு முன்பு தான் பார்த்தேன். தாவா சொத்தில் நவா இந்தியா மெட்ரிகுலேசன் பள்ளி சார்பாக பாத்ரூம் கட்டி பயன்படுத்தி வருகிறார்கள் என்றால் அது வேறு இடம் தாவா சொத்து வேறு இடம் ஆகும். தாவா சொத்து எந்த கிராமத்தில் உள்ளது பட்டுர் கிராமத்தில் உள்ளது.

2. தாவா சொத்து நஞ்சை நிலம் என்றாலும், விவசாயம் செய்யக் கூடிய நிலம் என்றாலும், கண்மாய் பாசனம் என்றாலும், நான் வாதி கேட்டுக் கொண்டதற்கிணங்க அங்கு விவசாயம் செய்து வந்தேன் என்று பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. நானோ, வாதியோ, எந்த காலத்திலும் தாவா சொத்திற்கு சென்றது கிடையாது என்றாலும், வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

<u>**மறுவிசாரணை:**</u> இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

(திரு.பொ.மகாராஜன்.,M.L)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேலூர்.